# கோவையில் உலகத்தரத்தில் செம்மொழிப் பூங்கா... முதல்வர் திறந்து வைத்தார்... முதல் பக்கத் தொடர்ச்சி

உலகத் தரத்திலான பூங்கா அமைப்பதற்கு 208.50 கோடி ரூபாய் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி, செம்மொழிப் பூங்காவில் தாவரவியல் பூங்கா, சூரியதகடு, சிற்பங்கள், பேட்டரியில் இயங்கும் வாகனங்கள், உக்கடம் கழிவுநீர் சுத்திகரிப்பு மையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீரை குழாய் மூலம் செம்மொழி பூங்காவிற்கு எடுத்து வருதல், பூங்கா வளாகத்தில் தரை தள வாகன நிறுத்துமிடம், நிலத்தடி நீர்த்தொட்டி, மழைநீர் வடிகால், மின்சாரம் மற்றும் தகவல் தொடர்பு குழாய்கள் மற்றும் கூடுதல் மேம்பாட்டு பணிகள், தரைத்தள வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் மொத்தம் 208.50 கோடி ரூபாய் செலவில் உலகத்தரத்தில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்காவினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

பின்னர், பூங்காவில் உள்ள தமிழர் கொடை சிற்ப வனம், கடையேழு வள்ளல்கள் சிலைகள், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான விளையாட்டுப் பூங்கா, படிப்பகம், திறந்தவெளி அரங்கம் போன்றவற்றை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். மேலும், செம்மொழிப் பூங்காவில் மரக்கன்றினை நட்டார்.

அதனைத் தொடர்ந்து, கோயம்புத்தூர் மாவட்டம், செட்டிபாளையம் பேரூராட்சிக் குட்பட்ட ஓராட்டுக்குப்பை கிராமத்தில் அனைவருக்கும் வீடுகள் வழங்கும் திட்டம் மற்றும் ஜி.டி. நாயுடு அறக்கட்டளையின் பங்களிப்புடன் 5 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் மாற்றுத்திறனாளிகளுக்காக மைச்பிரத்தியேகமாக வடி வமைக்கப்பட்டு கட்டப்பட்டுள்ள 86 புதிய வீடுகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பயனாளி களுக்கு வீடுகளுக்கான சாவிகளை வழங்கினார்.

பின்னர், முதலமைச்சர் அவர்கள், கோயம்புத்தூரிலுள்ள முக்கிய பிர முகர்களை சந்தித்து கலந்துரையாடி, பூங்கா வளாகத்தில் நடைபெற்ற பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.

**செம்மொழி பூங்காவின் சிறப்பம்சங்கள்**

உலகத்தரம் வாய்ந்த இப்பூங்காவில், செம்மொழி வனம், மூலிகை தோட்டம், மகரந்த தோட்டம், நீர்த் தோட்டம், மணம்கமிழ் தோட்டம், பாலைவனத் தோட்டம், மலர்த் தோட்டம், மூங்கில் தோட்டம், நட்சத்திர தோட்டம், ரோஜா தோட்டம், பசுமை வனம் போன்ற 23 வகையான தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், செம்மொழி வனத்தில் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள மரங்கள் மற்றும் செடிகள் நடப்பட்டு உள்ளதோடு, 2000க்கும் மேற்பட்ட ரோஜா வகைகள் ரோஜா தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பூங்கா வளாகத்தில் கடையேழு வள்ளல்களின் கற்சிலைகளும் நிறுவப்பட்டுள்ளது.

செம்மொழிப் பூங்கா வளாகத்தில், நுழைவுச்சீட்டு வழங்குமிடம் மற்றும் அனுபவ மையக் கட்டடம், 500 நபர்கள் அமரக் கூடிய வகையில் திறந்தவெளி அரங்கம், பூங்காவில் பணியாற்றும் தோட்ட தொழிலாளர்களுக்கு அறை, உணவகம், ஒப்பனை அறை, சில்லறை விற்பனை நிலையம், செயற்கை நீர்வீழ்ச்சியுடன் கூடிய நுழைவு வாயில் போன்ற பல்வேறு சிறப்பம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

செம்மொழிப் பூங்கா வளாகத்தில் தரை தள வாகன நிறுத்துமிடத்தில் மொத்தம் 453 கார்கள், 10 பேருந்துகள் மற்றும் 1000 இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் அளவிற்கு கட்டமைப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. மேலும், செம்மொழிப் பூங்கா வளாகத்தினுள் ஜெர்மன் தொழில்நுட்பத்தில் மழைநீர் சேகரிப்பு வடிகால் அமைப்பு 2 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது.

இப்பூங்கா வளாகத்தில் மக்கள் நடைப்பயிற்சி மேற்கொள்வதற்கு நடைபாதை மற்றும் சாலை வசதி அமைக்கப்பட்டுள்ள தோடு, மகளிர் சுயஉதவி குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக “மதி அங்காடி”யும் நிறுவப்பட்டுள்ளது.

செம்மொழி பூங்கா வளாகத்தினுள், உலகத் தரத்தில் உயர்தர உடற்பயிற்சி கருவிகளுடன் கூடிய திறந்தவெளி உடற்பயிற்சி கூடம், 4,000 சதுர அடி பரப்பளவில் உள்வன மாதிரி காட்சியமைப்பு (Terrarium), குழந்தைகள் விளையாடு வதற்கு 14,000 சதுர அடி பரப்பளவில் விளையாட்டுத்திடல், சிறுவர்களுக்கான உள்விளையாட்டு அறை, மாற்றுத்திறனாளிகள் விளையாடு வதற்கு ஏதுவாக பிரத்தியேக விளையாட்டு த்திடல் போன்ற பல்வேறு பொழுதுபோக்கு வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வளாகத்தில் உள்ள நுழைவுச் சீட்டு மற்றும் அனுபவ மையக் கட்டடத்தில் பழங்கால தமிழர்கள் உபயோகப்படுத்திய பொருட்களுடன் கூடிய அருங்காட்சியகம் மற்றும் தாவரவியல் அருங்காட்சியகம், இளம்வயதினர் படிப்பதற்கு ஏதுவாக படிப்பகம், முதியோர்களும் மாற்றுத்திறனாளிகளும் பயணிக்கும் வகையில் சக்கர நாற்காலிகள், பேட்டரி வாகனங்கள் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

செம்மொழி பூங்கா வளாகத்தில் உள்ள மரங்கள் மற்றும் தாவரங்கள் குறித்த தகவல்கள் அடங்கிய பெயர் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளதோடு, அதில் QR குறியீடுகள் மற்றும் Barcode போன்ற தொழில்நுட்ப வசதிகளும் நிறுவப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், நகராட்சி நிருவாக இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன், துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டை இழிவுபடுத்துவதையே தன்னுடைய தொழிலாகக் கொண்டிருக்கிறார் ஆளுநர் ரவி!

# தேசிய கீதத்தில் ‘திராவிடம்’ இடம் பெற்றிருக்கிறது என்பது ஆளுநர் ரவிக்குத் தெரியாதா?

## இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கேள்வி!

**சென்னை, நவ.26-**

**இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று (25.11.2025) சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து ஆளுநர் ஆர். என்.ரவி தெரிவித்த கருத்துகளை மறுத்து விரிவான விளக்கத்தை அளித்தார்.**

அமைச்சர் எஸ்.ரகுபதியின் பேட்டி வருமாறு :-

தமிழ்நாட்டில் அவதூறு பரப்புவதற்கென்றே அனுப்பப்பட்டவர் ஆளுநர் ரவி. கமலாலயத்துக்கு அனுப்பப்படவேண்டியவர் ராஜ் பவனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். நேற்று தனியார் தமிழ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ஆளுநர் ரவி ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளை சுமத்தி வழக்கம் போல தன்னுடைய பாணியில் பேசியிருக்கின்றார். தமிழ் கலாச்சாரம், நம்முடைய பண்பாடு, மொழி இவற்றை பற்றி எல்லாம் பேசுகின்ற ஆளுநர் ரவி அவர்கள் என்ன சொல்லி இருக்கிறார் என்பதை நாம் பார்த்தாக வேண்டும்.

**தமிழர்கள் மீதான மோடி – அமித்ஷாவின் குற்றச்சாட்டு!**

தமிழ்நாட்டை இழிவுபடுத்துவதையே தன்னுடைய தொழிலாகக் கொண்டிருக்கின்ற ஆளுநர் அவர்கள் அளித்த பேட்டியில் பாஜகவின் ஊதுகுழலாக முழங்கி இருக்கின்றார்.

திராவிடம் என்பது கற்பனை, தமிழ்நாட்டில் பீகாரிகள் அச்சுறுத்தப்பட்டனர், தமிழ்நாட்டில் மொழி சிறுபான்மையினர் உரிமைகள் பறிக்கப்படுகின்றன என பேட்டியில் கூறியிருக்கிறார். திராவிடம் என்பது கற்பனை என்று சொன்னால் நம்முடைய தேசிய கீதத்தில் திராவிடம் இடம் பெற்றிருக்கிறது என்பது ஆளுநர் ரவிக்குத் தெரியாதா? அல்லது வங்க மொழியிலே இருக்கிறது என்கின்ற காரணத்தால் அவரால் புரிந்து கொள்ள முடியவில்லையா?

அடுத்து அவர் சொல்லுகிற குற்றச்சாட்டு, பீகாரிகள் அச்சுறுத்தப்படுகின்றனர். இப்படித்தான் ஒரிசாவிலே தேர்தல் நடந்தது. ஒடிசாவில் தேர்தல் நடந்த நேரத்தில் அமித்ஷாவும் மோடியும் அங்கு பிரச்சாரம் செய்கின்ற பொழுது ஒடிசாவை ஒரு தமிழன் ஆள வேண்டுமா? ஒடிசாவின் சாவி தமிழ்நாட்டில் இருக்கிறது என்று தமிழர்களை திருடர்களைப் போல ஒரு குற்றச்சாட்டு சுமத்தினார்கள்.

தமிழர்கள் என்ன திருடர்களா? குற்றவாளிகளா? தமிழ்நாடு என்ன குற்றவாளிகள் பிறப்பிடமா? தமிழ்நாட்டிலே ஒடிசாவினுடைய சாவி இருக்கிறது என்று சொன்னால் இங்கே ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறதா? இப்படி மற்ற மாநிலங்களில் தமிழ்நாட்டைப் பற்றி பேசிவிட்டு பீகார் தேர்தலில் என்ன சொன்னார்கள்? தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பீகாரிகள் அச்சுறுத்தப்படுகின்றனர். அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிற வகையில் இருக்கிறது என்றெல்லாம் பொய்யான கட்டுக்கதைகளை அவர்கள் அவிழ்த்து விட்டார்கள்.”

வடமாநிலத்திலிருந்து அதிகாரிகள் குழு வந்து இங்கிருக்கும் பீகாரிகளிடம் ஆய்வு நடத்திய போது கூட, ”பீகாரிகள் தாக்கப்படுவதாக வீடியோக்களில் வந்ததெல்லாம் வதந்தி, நாங்கள் இங்கே நன்றாக இருக்கிறோம். நாங்கள் நன்றாக நடத்தப்படுகிறோம், எங்களுக்கு நல்ல பொருளாதாரம் கிடைக்கிறது. அதன் மூலமாக எங்கள் குடும்பத்தையே நாங்கள் காப்பாற்றக்கூடிய சூழ்நிலை எங்களுக்கு இருக்கிறது” என்று தெரிவித்தார்கள்.

எனவே எங்கு போனாலும் தமிழனுக்கு எதிராக பேசுவதை இன்றைக்கு கொள்கையாக கொண்டிருக்கக்கூடியவர்கள்தான் நம்முடைய ஆளுநரும் ஒன்றிய பாஜகவும். உடனே என்னுடைய தமிழ்ப் பற்று தெரியாதா என்பார்கள். ஆனால் தமிழ் மொழிக்காக அவர்கள் ஒதுக்கியது 150 கோடி. சமஸ்கிருதத்துக்காக அவர்கள் ஒதுக்கியது 2500 கோடி. இதுதான் தமிழ்ப் பற்றா? இதை எல்லாம் இன்றைக்கு மக்கள் புரிந்து கொண்டாக வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் சொல்ல வந்திருக்கின்றோம்.

**மாயத் தோற்றத்தை உருவாக்க முயற்சி!**

திராவிட மாடல் அரசு யாருக்கும் எதிரான அரசு கிடையாது. ஆளுநர் தான் தமிழ்நாட்டில் இருக்கிறேன் என்பதை மறந்துவிட்டார். தமிழ்நாட்டில் வசிக்கும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளைப் பேசும் சிறுபான்மை மக்கள் 2024-25 கல்வி ஆண்டிலும் தங்கள் தாய்மொழியிலேயே தேர்வுகளை எழுதலாம் என்ற அனுமதியை அரசு வழங்கியது. இந்த உத்தரவு பள்ளிக் கல்வித்துறையினுடைய செயலாளர் குமரகுருவால் பிறப்பிக்கப்படது. முன்னர், 2023 ஆம் ஆண்டு வரை இந்த அனுமதி இருந்தாலும், சிறுபான்மையினர் உயர் நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று அனுமதி வாங்கிய பின்னரே அது தொடர்ந்தது.



தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையால்சிறைபிடிக்கப்படும்போது, பிரதமர், உள்துறை அமைச்சர் அல்லது ஆளுநர் ஏதாவது ஓர் அறிக்கை வெளியிட்டிருப்பார்களா? ஆளுநர், தமிழ்நாடு தனித்து நிற்கிறது என்று கூறி, இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்கள் ஒற்றுமையாக இருப்பது போலவும், தமிழ்நாடு மட்டும் துண்டிக்கப்பட்டு விட்டது போலவும் ஒரு மாயத்தோற்றத்தை தன்னுடைய பேட்டியின் மூலமாக உருவாக்க முயற்சிக்கிறார்.

இந்தியாவில் இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களோடும் நல்ல உறவோடு இருக்கிறது என்பதை நிரூபிக்கும் வகையில், பஞ்சாப் முதல்வர், மேற்குவங்க முதல்வர், கேரளா முதல்வர், தெலுங்கானா முதல்வர் போன்ற பல மாநில முதல்வர்களையும் அழைத்து வந்து நிகழ்ச்சிகளை நடத்திய மாநிலம் தமிழ்நாடு தான். இந்தியப் பிரதமர், குடியரசுத் தலைவர், ராணுவ அமைச்சர் போன்றவர்களையும் அழைத்து வந்து இங்கே நிகழ்ச்சிகளை நடத்தியதன் மூலம், தமிழ்நாடு இந்தியாவோடு இணைந்து இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இந்திய – சீன போர் வந்தபோது, திராவிட நாடு கொள்கை முக்கியமல்ல, இந்தியாதான் முக்கியம் என்று கொள்கையை விட்டுக்கொடுத்து இந்திய நலனைப் பெரிதாக மதித்த ஒரே அரசியல் கட்சி திமுக தான். இந்தியா ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள் நாங்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு பெயர்மாற்ற தீர்மானத்தின் போது ‘தமிழ்நாடு என்று பெயர் வைப்பதால் நீங்கள் எதை இழக்கப் போகிறீர்கள்? வங்கத்துக்கோ குஜராத்துக்கோ யாருக்கும் இழப்பு கிடையாது. நாங்கள் எங்கள் தமிழ் மண்ணுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்துக் கொள்கிறோம்’ என்று சொன்ன உரிமையை சட்டமாக நிறைவேற்றித் தந்தார்கள்.

**ராஜ்பவனுக்கு ஆட்சி அதிகாரம் கிடையாது!**

ஆளுநரின் அதிகாரம் குறித்துப் பேசிய அமைச்சர், ஆட்சி அதிகார மையம் ஒன்றுதான் இருக்க வேண்டும் என்றும், அது மாநில சட்டமன்றம் தான் என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. ஆளுநர் டெல்லியில் இருந்து அனுப்பப்பட்ட ஒரு நபர் என்றும், ராஜ் பவனுக்கு ஆட்சி அதிகாரம் கிடையாது என்றும் கூறினார். ஆளுநர் மாநில அரசின் அமைச்சரவை முடிவுகளை ஒன்று ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது நிராகரிக்க வேண்டும் அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்; நிறுத்தி வைக்கின்ற உரிமை அவருக்கு கிடையாது, என்றார்.

துணை வேந்தர்கள் நியமனம் தொடர்பான சட்ட மசோதாவில் உச்ச நீதிமன்றம் கருத்து மட்டுமே சொல்லியிருக்கிறது, ஏப்ரல் எட்டாம் தேதி கொடுத்த தீர்ப்பிலே அவர்கள் எந்தத் தலையீடும் இடவில்லை. ஆளுநர் இனிவரும் காலங்களில் ஒப்புதல் அளிக்காமல் தாமதித்தால் சட்டத்தின் அவசியத்தைக் கருதி உடனடியாக உச்ச நீதிமன்றத்தை நாடி, மசோதாவின் மீது ஒப்புதலைத் தர வேண்டும் என்று கேட்கின்ற உரிமை மாநில அரசுக்கு இப்போது கிடைத்திரு க்கிறது. நீண்ட காலம் காலம் தாழ்த்தினால் நீதிமன்றத்தை நாடலாம் என்கின்ற கருத்து இருக்கிறதே தவிர, நிறுத்தி வைக்கலாம் என்கின்ற கருத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை.

**தமிழ்நாட்டின் கொள்கை இரு மொழிக் கொள்கை!**

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இந்தியை வைத்து மலிவான அரசியல் செய்ய வேண்டிய அவசியமே திமுக வுக்குக் கிடையாது. 1965 இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்தது. தமிழ்நாட்டின் கொள்கை இருமொழிக் கொள்கைதான்; இங்கே யாரும் இந்தி படிக்க விரும்பவில்லை; விரும்புகிறவர்கள் எங்கே வேண்டுமானாலும் படித்துக் கொள்ளலாம், தடை இல்லை.

ஆளுநர், தமிழ் மொழியைத் தவிர மற்ற மொழிகள் எல்லாம் இங்கு வெறுக்கப்படுகின்றன என்றும், மொழிச் சிறுபான்மையினர் வீடுகளில் பேசுவதற்கே பயப்படுகிறார்கள் என்றும் கூறிய கருத்து தவறானது. தமிழ்நாட்டில் எந்த மொழிக்கும் அச்சுறுத்தல் என்பது கிடையாது. அது ஆளுநரின் கற்பனை.

**பி.எல்.ஓ.க்களின் தற்கொலை!**

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் அதிவேகமாக நடைபெறுவதால் கவலை தெரிவித்த அமைச்சர், இந்த அவசர கதியிலான வேலைப்பளுவால் மன உளைச்சலுக்கு ஆளாகி பல்வேறு மாநிலங்களில் பல பிஎல்ஓக்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று வருத்தம் தெரிவித்தார். 30 நாட்கள் போதாது, போதுமான கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு மனிதரும் தன்னுடைய வாக்குரிமையை இழக்கக் கூடாது என்பதே அரசின் நோக்கம்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ஆர்.ரகுபதி தெரிவித்தார்.

மேலும் நிரந்தர டிஜிபி நியமனம் குறித்த விமர்சனங்களுக்குப் பதிலளித்த அவர், பொறுப்பு டிஜிபி என்பதை அறிமுகப்படுத்தியவர்களே அதிமுகவினர் தான் என்றும், திரு ராமானுஜம் மற்றும் திரு ராஜேந்திரன் போன்றோர் அதிமுக ஆட்சியில் பொறுப்பு டிஜிபியாக நியமிக்கப்பட்ட உதாரணங்கள் உள்ளன என்றும் சுட்டிக் காட்டினார். நிரந்தர டிஜிபி நியமனத்திற்கான பட்டியல் வரும்போது, வேண்டப்படாத பெயர்கள் அனுப்பப்படுகின்ற பொழுது, அதில் சில மாற்றங்களைச் செய்து தாருங்கள் என்று கேட்கின்ற உரிமை மாநில அரசுக்கு இருக்கிறது. தேர்தல் ஆணையம் எல்லா அதிகாரங்களும் கொண்ட ஒரு ஆணையம், தேர்தல் காலத்திலே நிரந்தர டிஜிபி, தலைமைச் செயலாளர், அல்லது மாவட்ட ஆட்சியர் ஆகியோரை மாற்றுவதற்கு தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உண்டு என்றும் அமைச்சர் எஸ். ரகுபதி விளக்கினார்.

தங்கள் மீது எத்தனை கல்லடி பட்டாலும், அந்தக் கல்லடிகளை எல்லாம் வெற்றிப்படிகளாக மாற்றக்கூடிய சக்தி திமு கழகத்துக்கு உண்டு என்றும் அவர் பதிலளித்தார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்ட நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் - 4, பகுதி - 1 விதி எண்.156 (2)ன் கீழ்)

**இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் பணியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டுள்ளதால், 2025-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு, மாநகராட்சி மன்ற கூடத்தில் நடைபெறுவதாக இருந்த சாதாரண மன்றக்கூட்டம் நிர்வாக நலன் கருதி ஒத்தி வைக்கப்படுகிறது. கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

**மேயர்**

செ.ம.தொ.இ / 1402 / வரைகலை / 2025




திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, காமராஜ் நகர் பகுதியில் ஆவடி அரசினர் பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் முதல் கட்டமாக 11 ஆம் வகுப்பு பயிலும் 475 மாணவியர்களுக்கு ரூ.22,61,000/ மதிப்பில் விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் சட்டமன்ற உறுப்பினர் துரைசந்திரசேகர் மேயர் ஜி.உதயகுமார், மற்றும் மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், மண்டல குழு தலைவர்கள் என்.ஜோதிலட்சுமி, ஜி.ராஜேந்திரன், அமுதா பேபிசேகர், ஜி.நாராயணபிரசாத், பேபிசேகர், பொன்.விஜயன், ஆசிரியர்கள் மற்றும் திரளான மாணவியர்கள் உள்ளனர்.



சைதாப்பேட்டை தொகுதி – சைதை மேற்கு பகுதியில் உள்ள 139 (அ) 142 (அ) ஆகிய வட்டங்களில் 22 வாக்குச்சாவடி மையங்கள் கொண்ட மேற்கு ஜோன்ஸ் சாலை சென்னை மேல்நிலைப்பள்ளி 22 பாக முகவர்களை நேரடியாக சென்று கழக துணைப் பொதுச் செயலாளரும், சென்னை மண்டல பொறுப்பாளருமான ஆ.ராசா எம்.பி. SIR சம்மந்தமாக பொதுமக்களுக்கு வழங்கிய படிவங்களையும், விவரங்களையும் திரும்ப பெற்ற படிவங்கள் எவ்வளவு என்பதை கேட்டு அறிந்தார். உடன் பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., பொதுக்குழு உறுப்பினர் களக்காடிஎல்லப்பன், வட்டக் கழக செயலாளர்கள் சை.மு.சேகர், அட்கோகமலநாதன், எஸ்.பி.கோதண்டம் பங்கேற்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றிய திமுக சார்பில் இளைஞர் எழுச்சி நாளையொட்டி சாலவாக்கத்தில் 1000 பேர் கருப்பு – சிவப்பு பலூன் கையிலேந்தி கலந்து கொண்ட இளைஞர் பேரணியை மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து, அப்பேரணி முடிவில்டி 49 கிலோ கேக் வெட்டி, பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் இளைஞரணி மாநில துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக், ஒன்றிய செயலாளர் டி.குமார், மாவட்டஇளைஞரணி அமைப்பாளர் யுவராஜ், துணை அமைப்பாளர்கள் மணி, ஆண்டோ, சஞ்சய் காந்தி, பால்ராஜ், வெங்கடராமன், சத்யா, சக்திவேல், வெங்கடேசன், ரவி, சிவராமன், சேகர், பாலமுருகன், பாண்டியன், பாபு ஷரீப், வசந்த மாலா, முரளிதரன், நந்தா, உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.